(மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட்டுக் கட்சி உறுப்பினர்கள் வெளி) நடப்புச் செய்தனர்)

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய நியாயமான ஜனநாயக உரிமைகளை வழங்குவதற்கு மறுக்கக்கூடிய இந்தப் போக்கைக் கண்டித்து நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் ஜனநாயக பூர்வமாகப் போராடுவதற்குக் கூட உரிமை மறுக்கப்பட்டிருப்பதைக் கண்டித்து நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(இந்திய ஐக்கியப் பொதுவுடைமைக் கட்சி உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் வெளிநடப்புச் செய்தார்.)

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கடற்கரையிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மீனவர்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள்கூர்ந்து நீங்கள் கொடுத்த அந்தத் தீர்மானம் பற்றிய விளக்கம் உங்களுக்கு அஞ்சலில் தரப்பட்டிருக்கிறது. அஞ்சல் பகுதிக்குப் போய் இருக்கிறது. அதற்குள் அதை எழுப்ப வேண்டாம். அப்படி அதற்கு விடை பெற்ற பிறகு தேவைப்பட்டால் அதை எழுப்புவதற்கு நான் உங்களுக்கு வாய்ப்பளிப்பேன். (குறுக்கீடு) இல்லை அவ்வளவுதான். நீங்கள் ஒன்று கொடுத்து அதை நான் மறுத்தாகி விட்டதென்றால் . . . (குறுக்கீடு)

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: நேற்றைக்கு you have agreed.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது நான் திருப்பி விடை சொல்லிவிடலாம். ஆய்வில் உள்ளது என்று சொல்லி விடலாம். அது ரொம்ப எளிது. இருந்தாலும் நிலைமையை விளக்குகிறேன். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. குமரி அனந்தன் : தமிழகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மீனவர்களும், மற்றவர்களும் அச்சப்படுகின்ற வகையிலும், தமிழ்நாட்டு எல்லை எல்லாம் பாதுகாப்பு இல்லாமல் இருப்பதனுடைய காரணத்தினாலே மிகுந்த அவசர உணர்வோடு நாங்கள் இதனைக் கொடுத்தோம். நேற்று நீங்கள் மறுப்புத் தெரிவித்ததற்குப் பிறகு, அதற்கு விளக்கம் வேண்டும் என்று

1990 ஏப்ரல் 18]

நான் கேட்டதற்குப் பிறகு, மீண்டும் எனக்கு அனுமதி இல்லை என்று சொல்லி இருக்கிறீர்கள் இந்த விதியிலே, 58–லே '(shall') என்று போட்டிருப்பது மிக உறுதியாக நீங்கள் விளக்கம் அதிலே சேர்த்திருக்கவேண்டும் என்பதுதான். நான் ஒவ்வொரு முறையும் நீங்கள் சொல்கிறபோதெல்லாம் உட்கார்ந்து எழுவதைப் பார்த்தால் ஒரு நல்ல எக்சர்சைஸ் பண்ணுகிற அளவிற்குக் கூட நான் ஒத்துழைத்துக்கொண்டு போகிறேன். ஆனால் நான் சொல்கிற ஒரு செய்தியைக் கூட நீங்கள் சொல்லவிட மறுக்கிறீர்கள். இங்கே வேண்டுமென்றே நான் எழாமல் சில நேரங்களிலே இருந்தேன். எனது அன்பு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது சொன்னார், காங்கிரஸ் காரர்களைப் போல தொழிலாளியினுடைய கால் தூசு படிக் கட்டுகளிலே பட்டுவிடும் என்று நீங்கள் இருக்காதவர்கள் என்று சொன்னார். எனக்கு அப்போதே எழவேண்டும் என்று தோன் றிற்று. காந்தி மகான் தொழிற்சங்கத்தை ஆரம்பித்தார். திரு.வி.க. தொழிற்சங்கத்தை ஆரம்பித்தார். வெள்ளைக் காரர்கள்தான் காந்தியைப் பற்றி அப்படி சொன்னார்களே தவிர காங்கிரஸ்காரர்கள் தொழிலாளர்களைப் பற்றி சொல்லவில்லை என்று சொல்லவேண்டுமென்று தோன்றிற்று. திடீர், திடீரென்று எழுகிறாயே என்று நீங்கள் சொல்வீர்களே என்பதற்காக நான் அமைதியாக இருந்தேன். இப்போது மீண்டும் சொல்கிறேன். எங்களுக்கு அந்த உரிமை நீங்கள் முதல் தடவை மறுத்ததற்குப் பிறகு நான் காரணம் கேட்டு நீங்கள் தருகிறேன் என்றுசொன்ன தற்குப் பிறகு ஒரு மறுப்பு வந்திருக்கிறதே, அது ஏன் என்பது தான். பிறகு அந்த மறுப்பிலாவது நீங்கள் விளக்கத்தைத் தந்திருக்கவேண்டாமா என்பதுதான். அதனாலேதான் அந்த உரிமையோடு நான் இதனைக் கேட்கிறேன். ஏனென்று சொன்னால் இங்கே புலிகள் மட்டுமல்ல புலிகளுக்கு ஆதரவாக இயங்கிக் கொண்டிருக்கிறவர்கள் கூட தேர்தல் வந்தால், முதலமைச்சர் கருணாநிதி என்னிடம்தானே வந்தாகவேண்டும் என்னை நெருங்கமுடியுமா பார்ப்போம் என்று ஒரு சவால் விட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில் தேச பக்தர்களாகிய நாங்கள் இந்தத் தேசத்தைப் பற்றி அக்கறைப்படாமல் இருக்கவேண்டும் என்று நீங்கள் நினைத்தால் நாங்கள் அதனை எப்படி ஒப்புக் கொள்வது? எப்படி உடன்படுவது என்பதைத்தான் தயவுசெய்து கேட்கிறேன். எனவே, பணிவோடு கேட்பது, விதிமுறையின்படி கூட எங்களுக்கு நீங்கள் தரவேண்டும். இப்போது அவர்கள் சொல்கிறார்கள். ஜனநாயக முறைப்படி எங்களுக்கு நீங்கள் தர்ணா நடத்துவதற்கு, போராட்டம் நடத்துவதற்கு உரிமை தரவில்லை என்று சொல்லி வெளிநடப்புச் செய்கிறார்கள் என்று சொன்னால், அதோடு இந்த அவையிலேயும் கூட எங்களுக்கு நீங்கள் உரிமை தரவில்லை என்பதைச் சொல்லி நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)